# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 11.03.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் வாழ்க்கையை கவனித்தால், அவர்கள் மிகவும் எளிமையாளவர்களாக இருந்தார்கள் என்பது தெரிய வரும். ஒரு பாத்திரத்தைத் தேய்த்துக் கழுவி பின்பு அதை இய்யம் பூசி சுத்தம் செய்து அதன் பின்னர் அதில் தூய உணவு பரிமாரப்படுவதைப் போல் அந்த மக்கள் திகழ்ந்தனர். மனிதன் இவ்வாறு தூய்மையானவனாக இருந்தால், அவன் தன்னை இய்யம் பூசப்பட்ட பாத்திரம் போன்று பளிச்சிடச் செய்தால், இறைவனின் அருட்கொடை என்ற உணவு அதில் பரிமாறப்படும். ஆனால் இப்போது அவ்வாறான மனிதர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. இதில் பாத்திரத்தை உவமையாக எடுத்துக் கூறி விளக்கியுள்ளார்கள். அதாவது பாத்திரம் தூய்மையாவதைப் போன்று சஹாபாக்களின் உள்ளமும் இருந்தது. அது இறை வசனத்தால் ஒளிமிகுந்ததாக இருந்தது. அவர்கள் **கத்அஃப்லஹ மன்ஸக்காஹா – அதனை (ஆன்மாவினைத் தூய்மைப்படுத்துபவன் நிச்சயமாக வெற்றி பெறுகின்றான் (91:10)** என்ற வசனத்தை மெய்ப்பிப்பவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த சஹாபாக்களில் உருவாக்கிய மாற்றம் இதுவாகும். அந்த சஹாபாக்கள் (ஈமான் கொள்வதற்கு முன்) பகைமையிலும் காழ்ப்புணர்ச்சியிலும் மிகவும் அதிகமாக மூழ்கியிருந்தனர். ஒருமுறை பகைமை கொண்டால் அது பல வருடங்களாக தொடர்ந்தது மட்டுமின்றி, அது பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து வந்தது. ஆனால் அவர்கள் ஈமான் கொண்ட பின் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது கொண்ட நேசத்தால் இறைவனின் முழு அடியார்களாக மாற முயற்சி செய்தனர். திருக்குர்ஆனை ஓதி அதை புரிந்து கொண்டனர். அதை வாழ்க்கையில் அமல்படுத்தினர். இந்த இறை வசனங்களால் அவர்கள் தமது உள்ளங்களுக்கு ஒளியூட்டினர். இய்யம் பூசப்பட்ட பாத்திரம் மின்னுவது போல் அவர்களும் மின்னினார்கள்.

இங்கே வசிப்பவர்களுக்கு பாத்திரத்தில் இய்யம் பூசுவது என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கலாம். பழைய காலத்தில் பித்தளை அல்லது செம்புப் பாத்திரங்கள் இருந்தன. அதில் கொஞ்ச காலத்திற்கு ஒரு முறை இய்யம் பூசுவார்கள். பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் வாழ்பவர்களுக்கு பாத்திரங்களுக்கு இய்யம் பூசுவது எப்படி என்று தெரிந்திருக்கும். குறிப்பாக நமது லங்கர்கானாவில் டியூட்டி கொடுப்பவர்களுக்கு தெரிந்திருக்கலாம். ஏனென்றால் மாநாடுகளின் போது தேக்சாக்களுக்கு இய்யம் பூசப்படுகின்றன.

இய்யம் பூசுவதற்கு முன்பாக பாத்திரம் நெருப்பில் போடப்படுகிறது. பின்பு அதில் சில கெமிக்கல் சேர்க்கப்படுகிறது. பின்பு ஒரு வெண்மை நிற மின்னும் உலோகம் பூசப்படுகிறது. இதற்கு முன் பாத்திரத்தில் படிந்திருக்கும் மாசு நீக்கப்பட்டு பின்பு அந்த உலோகம் பூசப்பட்டு ஒரு துணியை வைத்து அதை நன்றாக பாலிஸ் செய்யப்படுகிறது. பிறகு அந்தப் பாத்திரம் மிகவும் தூயமையான, மின்னுகின்ற வெள்ளிப் பாத்திரம் போன்று ஆகி விடுகிறது. இந்த விளக்கத்தை நான் கூறக்காரணம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இங்கு மெருகூட்டப்பட்ட பாத்திரத்தை உதாரணமாக கூறுகிறார்கள். இது ஒன்றும் சாதாரண முயற்சி அல்ல. மாறாக, பாத்திரம் நன்கு சுத்தம் செய்யப்பட்ட பிறகு அதை இன்னும் அதிகமாக பளிச்சிட வைப்பதற்காக அது தீயில் போடப்படுகிறது. அதன் பிறகு ஒரு சில செயல்பாடுகள் நடைபெற்று தொடர்ச்சியான செயல்முறைக்கு உட்படுத்தப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதன் கருத்து என்னவென்றால், மனிதன்

இறை வசனங்களின் ஒளியிலிருந்து உண்மையான முறையில் ஒளி பெற வேண்டுமென்றால், ஒரு வேதனையைக் கடக்க வேண்டியதுள்ளது. அல்லது வேதனையளிக்கும் கடின உழைப்பை கடக்கச் செய்ய வேண்டியதுள்ளது. அப்போது தான் இறைவன் கூறிய அந்தத் தகுதியை ஒருவரால் அடைய முடியும்.

இறைவன் கூறுகிறான்: தூய்மையானவன் வெற்றி அடைந்து விட்டான். உள்ளம் தூய்மையடைந்தால் அல்லது உள்ளத்தை தூய்மையாக்க முயற்சி செய்தால் அதற்கு மிகவும் கடின உழைப்பு தேவை. இக்காலகட்டத்தில் முன்னவர்களை பின்னவர்களோடு இணைப்பதற்காக தமது எஜமானரை முழுமையாகப் பின்பற்றியவர்களாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றியுள்ளார்கள். துருப்பிடித்த உள்ளங்களை தூய்மையாக்குவதற்கான வழியை கற்றுக் கொடுத்து, இந்த பாத்திரங்களை இறை வசனங்களால் ஒளியூட்டுவதற்காக வந்தார்கள். அவர்களது சஹாபாக்களில் நாம் யாரைப் பார்த்தாலும் இந்த உதாரணம் அவர்களுக்குப் பொருந்துவதை நாம் பார்க்கின்றோம். அவர்களது உள்ளங்கள் ஒளியால் நிரம்பியிருந்தன. அவர்கள் இறையச்சத்தால் வாழக் கூடியவர்களாக விளங்கினர். எனவே இந்தச் செயல்களை செய்தால் தான் நாம் இறைவனின் நெருக்கத்தைப் பெற முடியும். நமது உள்ளத்தை தூய்மையாக்க முடியும்.

இக்கருத்தை இன்னும் விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

உள்ளத்தை தூய்மையாக்குதல் என்றால் என்னவென்று உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஒரு முஸ்லிம் இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமைகளையும், இறை படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளையும் முழுமையாக செலுத்துவதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாவினால் இறைவனையும் அவனது பண்புகளையும் ஈடிணையற்றது என்று கூறுவது போன்று செயல்பூர்வமாகவும் இதை நிரூபித்துக் காட்ட வேண்டும். அவனது படைப்பினங்களுடன் அனுதாபம் கொண்டு மிருதுவாக நடந்து கொள்ள வேண்டும். மனிதன் தனது சகோதரர்களுடன் எவ்வித காழ்ப்புணர்ச்சியும், பொறாமையும், வஞ்சகமும் கொள்ளக் கூடாது. பிறரது குறையைக் கூறுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும். நீங்கள் எல்லாரும் பரஸ்பரம் செய்து ஒன்றாகி விடுங்கள். நீங்கள் ஒன்றாகி விட்டால் உங்கள் உள்ளங்களை தூய்மையாக்கி விட்டீர்கள் என்று கூறலாம் என்று இறைவன் கூறுகிறான். உலகத்தில் மனிதன் **கத்அஃப்லஹ மன்ஸக்காஹா – அதனை (ஆன்மாவினை)த் தூய்மைப்படுத்துபவன் நிச்சயமாக வெற்றி பெறுகின்றான் (91:10)** என்ற வசனத்தின் படி செயல்படுவதால் சொர்க்கம் கிடைக்கிறது. மனிதன் இறைவணக்கத்தின் அடிப்படையையும், குறிக்கோளையும் பெற்று விட்டால் பின்பு இறைவன் புறமிருந்து அருட்கொடைகளைப் பெறுவதற்கான தொடர்ச்சி கிடைத்து விடும். அதாவது மரணத்திற்குப் பிறகு கிடைக்கவிருக்கும் அருட்கொடைகள் ஆன்மீக முறையில் இவ்வுலகிலேயே கிடைத்து விடும்.

இந்த அசல் குறிக்கோளை அடைவதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வுலகிற்குத் தோன்றினார்கள். மனிதர்களிடையே தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்தி ஆன்மீக அருட்கொடைகளைப் பெறுபவர்களாக ஆக்குவதற்காக தோன்றினார்கள். இந்த உண்மையான குறிக்கோளைப் புரிந்து கொண்டு செயல்படுவதற்கான நல்வாய்ப்பை இறைவன் ஒவ்வொரு அஹ்மதிக்கும் வழங்குவானாக! இந்த உண்மையைப் புரிந்து கொண்டு தமது உள்ளத்தை தூய்மையாக்க முயற்சி செய்தவர்கள் மிகவும் பாக்கியசாலிகள் ஆவர். இவர்கள் இறைவனின் நெருக்கத்தைப் பெறுபவர்கள் ஆவர்.

நான் கூறியது போன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றியவாறு தம்மில் அசாதாரணமான முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினர். அதை தமது சந்ததிகளுக்கு வழங்க முயற்சி செய்தார்கள். இந்த அருட்கொடையை இன்றும் தொடர்ந்து செய்து வருபவர்கள் மிகவும் பாக்கியசாலிகள் ஆவர்.

இப்போது நான் ஒரு சான்றோரைப் பற்றி கூறவிருக்கிறேன். இவர், சஹாபிகளாக இருந்த அவரது தகப்பனார் மற்றும் தாத்தாவின் பெயர்களை உயர்த்தியவர் ஆவார். உள்ளத்தை தூய்மையாக்குவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய சிறப்புகள் யாவும் இவரிடம் தென்படுகிறது. இவருடன் எனக்கு மிகவும் நெருக்கமான தொடர்பு இருந்தது; இருந்தும் வருகின்றது. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இரண்டு மகத்துவமிக்க சஹாபாக்களின் பேரர் ஆவார். கடந்த சில தினங்களுக்கு முன் இவர் வஃபாத் ஆகிவிட்டார்கள். இவரது பெயர் ஹஸ்ரத் ஸெய்யத் தாவூது முஸஃப்பர் ஷா சாஹிப் ஆகும்.

இவர்களுடைய தாத்தா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். அவர் பெயர் ஹஸ்ரத் டாக்டர் ஸெய்யத் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிப் ஆகும். இவர் இறையச்சம், தூய்மை, பணிவு மற்றும் தன்னடக்கம் ஆகிய நல்ல குணங்களும், இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும், இறை படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் மிகவும் அக்கறையுடன் செலுத்துபவர் ஆவார். இவரைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ., அவர்கள் ஒரு அறிவிப்பு எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஸெய்யத் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: ஒருமுறை முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தது. அப்போது ஹுஸுர் அவர்கள் ஆடுகளை சதகாவாக கொடுத்தார்கள். அப்போது நான் (அதாவது டாக்டர் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிப்) அங்கு இருந்தேன். அவர்களுக்கு மருந்து கொடுத்து வந்தேன். காலையில் ஹுஸுர் அவர்கள் – அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். அப்போது உடல்நலம் கொஞ்சம் தேறியிருந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். டாக்டர் சாஹிப் இரவு முழுவதும் என்னுடன் கண்விழித்திருந்தார்கள். எனக்கு சரியாக மருந்துகள் கொடுத்து வந்தார்கள் என்று கூறியதும், ஹுஸுர் (அலை) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். பின்பு இவர் மீதும் நமக்கும் பொறாமை ஏற்படுகிறது. இவர் சொர்க்கத்திற்குரியவர் ஆவார் என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

ஹஸ்ரத் டாக்டர் ஸெய்யத் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிப், ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிப் அவர்களின் தாதா ஆவார். இவர் மிகவும் பொறுமையாளர் மற்றும் தைரியசாலி என்பதற்கு இவரைப் பற்றி ஒரு சம்பவம் உள்ளது. இது இதற்கு முன் பலமுறை கூறப்பட்டிருக்கலாம். ஒருமுறை இவர் ஒரு மனிதருக்கு மஸ்ஜிதில் அமர்ந்து தப்லீக் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் அரசு மருத்துவமனையில் சிவில் சர்ஜனாக வேலை பார்த்து வந்தார். அந்த காலத்தில் சிவில் சர்ஜன் மிகப்பெரிய ஒரு பதவியாகக் கருதப்பட்டு வந்தது. அந்த மனிதரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்தன்மை குறித்து விவாதம் செய்து கொண்டிருந்த போது அவர் கோபங்கொண்டு சுட்ட மண் பானையைத் தூக்கி அவர்களின் மீது எறிந்து விட்டார். அல்லது தலையில் அடித்து விட்டார். இது அவர்களின் நெற்றியில் பட்டு அவர்களுக்கு மண்டை உடைந்து விட்டது. இதனால் இரத்தம் வழிந்தோடியது. டாக்டர் சாஹிப் ஒன்றும் கூறாமல் தலையில் கையை வைத்தவாறு அங்கிருந்து சென்று விட்டார்கள். பின் தலையில் கட்டுப் போட்டுக் கொண்டார்கள். இதற்கிடையே அந்த மனிதர் அய்யோ நான் என்ன செய்து விட்டேன். இவர் ஒரு பெரிய அரசு அதிகாரி ஆவார். எனவே இப்போது போலீஸ் வந்து என்னை பிடித்துச் செல்லப் போகிறது என்று நினைத்தார்; அவர் அஞ்சினார். ஆனால் டாக்டர் சாஹிப் தலையில் கட்டுப் போட்டுக் கொண்டு வந்து, இப்போது உனது கோபம் சற்று குறைந்திருக்கும் என்று கூறி வாருங்கள் இனி நாம் தொடர்ந்து பேசலாம் என்று கூறினார். அதற்கு அவர், நான் மிகவும் அஞ்சிக் கொண்டிருந்தேன். எனவே அவர்களிடம் மன்னிப்புக் கேட்க ஆரம்பித்து விட்டேன். எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. டாக்டர் சாஹிப் என்னை தண்டிக்க உரிமை இருந்த போதும் மன்னித்து விட்டார்கள். தன்னிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்தியவரால் தான் இதுபோன்ற உயரிய நல்லொழுக்கத்தைக் காட்ட முடியும்.

நான் கூறியது போன்று அப்துஸ் ஸத்தார் சாஹிப் அவர்களுக்கு டாக்டர் ஸெய்யத் முஸஃப்பர் சாஹிப் பாட்டனார் ஆவார்கள். ஹஸ்ரத் ஹாஃபிஸ் மஹ்மூதுல்லாஹ் சாஹிபின் இரண்டாவது மகன் தான் ஸெய்யது முஸஃப்பர் சாஹிப் ஆவார்கள். இவர்களைப் பற்றி ஹஸ்ரத் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் கான் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சிறப்பு மருத்துவர் தமது கட்டுரையில் இவ்வாறு

எழுதுகிறார். ஹஸ்ரத் ஸெய்யத் முஹம்மதுல்லாஹ் ஷா சாஹிபின் இரண்டாவது மகன் – அதாவது ஹஸ்ரத் டாக்டர் அப்துஸ்ஸத்தார் சாஹிப் (ரலி) மற்றும் அவர்களது மனைவி ஆகிய இருவரும் தூய ஜோடி ஆவர். இவர் மிகவும் நல்லொழுக்கம் கொண்ட பெரியவராகத் திகழ்ந்தார். இவர் இறைவனோடு மிகவும் நேசத்துடன் தொடர்புடையவராக இருந்தது மட்டுமின்றி இறை படைப்பினங்களுக்கும் நன்மையை நாடுபவராகத் திகழ்ந்தார். இவரது நேசத்தின் வட்டம் மிகவும் பரந்ததாகும். பெரியவர்களை மதிப்பது, சிறியவர்களின் மீது கருணை காட்டுவது இவரது சிறப்புப் பண்பாகும். இவரது துஆவினால் இவருடைய மகன்களும் நேர்மையானவரும் நல்லவரும் ஆவார்கள். அதாவது ஒரு மகன் ஸெய்யத் தாவூத் சாஹிப் மற்றும் ஸெய்யத் மஸ்வூத் முபாரக் ஷா சாஹிப் ஆகிய இருவரும் நல்லவர்களாவர். இவர்களுள் ஒரு பாக்கியசாலியும் உள்ளார். அதாவது ஸெய்யத் முஸஃப்பர் ஷா சாஹிபை பற்றி கூறுகிறார். இவர்களுள் ஒரு பாக்கியசாலியும் உள்ளார். அவருக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது ஒரு மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். இறைவன் இந்த தம்பதியருக்கு ஆறு குழந்தைகளை வழங்கினான்.

டாக்டர் சாஹிப் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ஸெய்யத் முஹம்மல்லாஹ் சாஹிபின் ஒரு மகன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மருமகனாகவும் ஆனார்கள். இது ஸெய்யத் தாவூது முஸஃப்பர் ஷா சாஹிப் ஆவார்கள். இவரும் தமது மூதாதையர்களின் பண்புகளாகிய இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும், இறை படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் செலுத்துவது ஆகிய சிறப்பம்சங்களை அதிகமாக கொண்டிருந்தார். இறைவணக்கத்தில் ஆர்வம் கொண்டவராகவும் திருக்குர்ஆனோடு நேசம் கொண்டவராகவும் பணிவு, தன்னடக்கம், எல்லாரோடும் மிகவும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் சந்திப்பது ஆகிய நற்குணங்கள் இவரிடம் சிறப்பாக காணப்பட்டது. இவர்கள் தமது மனைவியின் தம்பிகளுக்கும் அதிகமாக கண்ணியம் வழங்குவார்கள். காரணம் இவர்தான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகன்கள் ஆவர். சில நேரம் நெருங்கிய உறவுகளுக்கு மத்தியில் பிணக்கம் ஏற்பட்டு விடும். ஆனால் சூழ்நிலை சரியில்லை என்று இவர்களுக்கு தெரிய வந்தால் இவர் அமைதியாகி விடுவது மட்டுமின்றி இந்த சிறியவர்களுடன் மிகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். இதனால் மிகவும் சுமூகமான தீர்வு ஏற்பட்டு விடும். அல்லது அங்கிருந்து அமைதியாக எழுந்து போய் விடுவார்கள்.

மாறாக, நான் பார்த்தும் இருக்கிறேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தினருக்கு குறிப்பாக அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் ஆச்சர்யமூட்டும் வகையில் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். இதற்குக் காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கும் இரத்த உறவு ஆகும். சில நேரம் பிறருக்கு இவர் கொடுத்து வந்த மரியாதையை நான் பார்க்கும் போது எனக்கே இது மிகவும் வியப்பை ஏற்படுத்தும். இவர்கள் தேவைக்கு அதிகமாகவே மரியாதை கொடுக்கிறார்கள் என்று தோன்றும். அது என்னுடைய பார்வையில் அந்த சூழ்நிலையில் பொருத்தமானதாக எனக்கு தெரியாது. ஆனால் அவர்களின் இயல்பில் இருந்த நல்ல குணத்தின் காரணமாக இவ்வாறு உயரிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது சரியாகத்தான் இருந்தது.

ஸெய்யத் தாவூது முஸஃப்பர் ஷா சாஹிப் மற்றும் அவர்களின் மனைவி ஸெய்யிதா அமத்துல் ஹகீம் பேகம் சாஹிபா ஆகிய இருவரின் ஜோடி இறைவனால் சேர்க்கப்பட்ட பொருத்தமாகும். நன்மைகளைச் செய்வது மற்றும் உயரிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது ஆகிய நன்மைகளில் இருவரும் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ள முயற்சி செய்வார்கள். பொதுவாக நாம் பார்க்கிறோம். இந்த செலவு ஏன் செய்தாய்? அந்த செலவை ஏன் செயதாய் என்று கேட்டு சில சமயம் கணவன் – மனைவி மத்தியில் பிணக்கம் ஏற்பட்டு விடும். ஆனால் இவர்கள் இருவரிடமும் உலக செலவீனங்களைப் பற்றிய சிந்தனை ஏதும் இருந்ததில்லை. எவ்வாறு ஏதாவது தேவையுடையவருக்கு உதவி செய்வது என்ற சிந்தனை இவர்களிடம் அதிகமாக இருப்பதை நான் பார்த்துள்ளேன். கணவன் யாருக்காவது உதவி செய்திருந்தால் மனைவி இன்னும் அதிகமாக கொடுத்திருக்கலாம் என்று சொல்வார்கள். மனைவி யாருக்காவது உதவி செய்தால் கணவன் என்னிடம் இன்னும் செல்வம் இருந்திருப்பின் இன்னும் அதிகமாக கொடுத்திருப்பேன் என்று கூறுவார்.

ஹஸ்ரத் ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிப் அவர்களின் மனைவி ஸய்யிதா அமத்துல் ஹகீம் பேகம் சாஹிபா கடந்த 8-9 வருடங்களுக்கு முன் மரணமடைந்து விட்டார்கள். இவர் கூறுகிறார். என்னுடைய மனைவி எனது கனவில் தோன்றி இந்த இந்த ஏழைக்கு உதவி செய்யுங்கள். இன்னின்ன மனிதருக்கு இவ்வளவு தொகை சதகாவாக கொடுங்கள் என்று கூறுவார். அதை உடனடியாக ஷா சாஹிப் கொடுத்து விடுவார். அவருக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு இருந்தாலும் அதில் குறைந்த தொகையையே தனக்காக செலவிடுவார். பெருமளவு தொகையை பிறருக்கு கொடுத்து விடுவார். கணவன் – மனைவி இருவரையும் நான் அறிவேன். இன்னும் சிலர் என்னிடம் கூறியுள்ளார்கள். அவர்களிடம் ஆயிரக்கணக்கான ரூபாய் வந்தாலும் அது அனைத்தையும் பகிர்ந்து கொடுத்து விடுவார்கள். தங்களிடம் என்ன எஞ்சியிருக்கும் என்பதைப் பற்றி சற்றும் கவலைப்பட மாட்டார்கள். நான் இவர்களது நிலத்தை நிர்வகித்து வந்த போது ஒரு வருடத்திற்குத் தேவையான கோதுமை மற்றும் அரிசியை சேமித்து வைத்துக் கொள்வது ஒரு நடைமுறையாகும். முதல் வருடம் நான் ஸய்யிதா அமத்துல் ஹகீம் சாஹிபாவிடம் உங்களுக்கு எவ்வளவு கோதுமை வேண்டும் என்று கேட்ட போது 120 மன் வேண்டும் என்று கூறினார்கள். நான் அவர்களிடம் வீட்டு செலவிற்கு அதிகபட்சமான 20-25 அல்லது 30 மன் தானே தேவைப்படும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இல்லை எனக்கு, இவ்வளவு தேவைப்படுகிறது. ஏனென்றால் பல ஏழை குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் தேவைப்படும் கோதுமையை தானமாக கொடுத்து வருகிறேன் என்று கூறினார்கள். இதே போன்றுதான் ஹஸ்ரத் ஷா சாஹிபுடையதாகவும் இருந்தது.

ஸெய்யது தாவூத் ஷா சாஹிப் எனக்கு சித்தப்பா (தாயின் சகோதரியின் கணவர்) மற்றும் எனது மாமனாரும் ஆவார். அவர்களிடம் பல்வேறு சிறப்பு குணங்கள் இருந்தன. இந்த சிறப்புப் பண்புகளை இவர்கள் எனக்கு நெருங்கிய சொந்தக்காரர் ஆவார் என்ற காரணத்தால் எடுத்துச் சொல்லவில்லை. மாறாக, நான் இவ்விரண்டு பேரையும் எனது குழந்தைப் பருவத்திலிருந்தே பார்த்து வருகிறேன். இதனால் என் மனதில் நல்ல பல விளைவுகள் ஏற்பட்டன. மிகவும் அமைதியானவர்; துஆ செய்பவர்; குழந்தைகளுடனும் பரிவோடும் சிரித்த முகத்துடனும் சந்திப்பவர் மதிப்பளிப்பவர்; எல்லாவித உலக ஆதாயத்தை விட்டும் விலகியவர்; தூய்மையானவர் ஆவார்.

நமது உறவினர் ஒருவர் இவரைப் பற்றி எனக்கு எழுதியுள்ளார். மிகவும் பொருத்தமாக எழுதியுள்ளார். ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் சாஹிப் மிகவும் அன்பிற்குரியவர் ஆவார். அமைதியானவராவார். துஆ செய்பவர் ஆவார். அவரது உதடுகளில் எந்நேரமும் துஆக்கள் ஓடிக் கொண்டிருக்கும். துன்பம், வேதனை ஆகியவற்றில் பிறருக்கு உறுதுணையாக இருப்பவர். இறைவணக்கத்தில் ஆழமான சிந்தனையுடையவர் ஆவார். இறைவன் அவர்களோடு நடந்து கொண்ட விதம் பற்றியும் நான் கூறுவேன். ஆனால் அதற்கு முன் இவரது தாய்வழி பாட்டனார் குடும்பத்தைப் பற்றியும் சிலவற்றை கூறுகிறேன்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இவரது தாய்வழி பாட்டனார் சர்வர் ஷா சாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாவார். இவர் ஜமாஅத்தில் மிகவும் கண்ணியத்திற்குரியவர் ஆவார். இவர் மிக நீண்ட காலமாக (முஃப்தி) மார்க்கத் தீர்ப்பு வழங்குபவராகவும் இருந்திருக்கிறார்.

இவர்களது தொழுகை மிகவும் நீண்டதாகவும் ஆழமான சிந்தனை கொண்டதாகவும் இருந்தது என்று முந்தைய மக்கள் சொல்வதுண்டு. ஸெய்யது சர்வர் ஷா (ரலி) அவர்களைப் பற்றி ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் ஒருமுறை பள்ளிவாசலில் நின்று சுன்னத் அல்லது நஃபில் தொழுது கொண்டிருந்தார். ரொம்ப நேரமாக நிய்யத் செய்து விட்டு நின்று கொண்டேயிருந்தார்கள். பள்ளிவாசலின் ஒரு மூலையில் நின்றபடியே இருந்தார்கள். சிறிது நேரம் கழித்து நான் அவர் எப்படி தொழுகிறார் என்று பார்ப்பதற்காக சென்றேன். அப்போது மவ்லவி சாஹிப் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற வசனத்தையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள். மிக நீண்ட நேரம் இவ்வாறு கூறிக் கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் ஸெய்யத் சர்வர் ஷா சாஹிப் (ரலி) அவர்கள் ஜமாஅத்தாகவும் தொழுவார்கள்.

ஜமாஅத்தாக தொழுகையையும் நடத்துவார்கள். அவர்கள் இமாமத் செய்து தொழ வைக்கும் போதும் தொழுகை மிக நீண்டதாக இருந்தது. எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறினேன். ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் சாஹிப் இவர்களது பேரன் ஆவார். துஆவிலும் நல்லொழுக்கத்திலும் உயர் தரமான தகுதியைப் பெற்றிருந்தார்கள். இது அவர்களுக்கு இரண்டு தரப்பிலிருந்தும் கிடைத்த பரம்பரை சொத்தாகும். சான்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதும் அவர்களிடம் விசுவாசத்துடன் நடந்து கொள்வதும் எல்லாராலும் முடியாது. ஆனால் ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிப் இந்தப் பணியை சிறப்பாக செய்துள்ளார்.

இவர்களிடம் யாராவது துஆ செய்யுமாறு கூறினால் துஆ செய்யச் சொன்னவர் போதும் என்று சொல்லும் வரை துஆ செய்து கொண்டே இருப்பவர் ஆவார். எனக்கு தனிப்பட்ட முறையிலும் தெரியும். சிலர் எனக்கு இதை சுட்டிக்காட்டியும் எழுதியுள்ளார்கள். அதாவது ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிப் இவ்வாறு கூறுவார்கள். மக்கள் என்னிடம் துஆ செய்யுமாறு கூறுகின்றனர். ஆனால் பிரச்சனை தீர்ந்து விட்டது என்று என்னிடம் சொல்வதில்லை. வருடம் கழிந்த பின் அல்லது சில மாதங்கள் கழிந்த பின் எப்போதோ இறையருளால் பிரச்சனை தீர்ந்து விட்டது என்று தெரிய வரும். இவர்கள் அதுவரை அந்த குறிப்பிட்ட நபருக்காக துஆ செய்து கொண்டே இருப்பார்கள். யாராவது இவருக்கு சின்னச்சின்ன தொண்டுகள் செய்தாலும் அவருடைய பெயரைச் சொல்லி துஆ செய்து வருவார்கள். இவர்களுக்காக தொண்டு செய்த மருத்துவர்களுக்கு மிக அதிகமாக துஆ செய்வார்கள். டாக்டர் நூரி சாஹிப் ரப்வா வரும் போதெல்லாம் ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிபை பார்ப்பதற்காகவும் அவர்களது நோயிற்கு சிகிச்சை அளிக்கவும் கூப்பிட்டு விட்டால் கண்டிப்பாக வருவார்கள். பிறகு ஷா சாஹிப் அவர்களுக்கு மிக அதிகமாக துஆ செய்வார்கள். அல்லாஹ் அவர்களது துஆக்களை ஏற்றுக் கொள்வானாக. ஏனெனில் டாக்டர் சாஹிப் மக்களுக்கு மிகவும் அதிகமாக பயனுள்ள மனிதர் ஆவார்.

அதே போன்று டாக்டர் அப்துல் காலிக் சாஹிப் அவர்களும் ஷா சாஹிபின் சிகிச்சைக்காக வருவதுண்டு. மிக நீண்ட காலமாக முஸஃப்பர் ஷா சாஹிப் இருதய நோயால் அவதிப்பட்டு வந்தார்கள். பலமுறை உடல்நலம் மோசமாகும் போது டாக்டர் காலிக் சாஹிபை கூப்பிட்டு அனுப்பினால் உடனடியாக வந்து சிகிச்சை தருவார்கள். டாக்டர் காலிக் சாஹிப் எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார்கள். ஷா சாஹிப் உடல்நலமின்றி காணப்பட்ட போது நான் எப்போது அவர்களை சந்திக்க அவர்களின் வீட்டிற்கு சென்றாலும் அடிக்கடி என்னிடம் டாக்டர் சாஹிப், எனக்காக துஆ செய்யுங்கள். நான் துஆ மற்றும் இறைவணக்கத்திலிருந்து பேரிழந்தவனாக இருக்கும் நிலையில் எனக்கு மரணம் வராமல் இருக்க துஆ செய்யுங்கள் என்று கூறுவார்கள். அல்லாஹ் அவர்களின் முடிவு சிறப்பாக அமையும் என்பதை சில நண்பவர்களுக்கு கனவின் மூலம் காட்டி, இவர்கள் மீது அருள் புரிந்துள்ளான்.

கொஞ்ச நாட்களுக்கு முன் இவரது மருமகன் ஒரு கனவு கண்டார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வந்து ஸெய்யது தாவூது முஸஃப்பர் ஷா சாஹிபை கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார்கள்.

பிறகு ஷா சாஹிபும் ஒரு கனவு கண்டுள்ளார்கள். இது மிகவும் நீண்ட கனவாகும். அதன் சுருக்கத்தை சொல்கிறேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவருக்காக ஒரு நாற்காலியை அமைத்து வைத்துள்ளார்கள்.

பினறு இன்னொரு பெண்மனிக்கும் ஒரு கனவு வந்துள்ளது. அந்தப் பெண்ணுக்கு இவர் அதிகமாக அறிமுகம் கிடையாது. இவர் கண்ட கனவும் மிகவும் நீண்டதாகும். அதன் சுருக்கத்தைக் கூறுகிறேன். ஷா சாஹிப் மிகவும் கண்ணியம் மிக்கவர் ஆவார். இறைவனின் பார்வையில் இவருக்கு பெரிய கண்ணியம் உள்ளது என்று அந்தப் பெண்ணுக்கு கனவின் நிலையிலேயே உள்ளத்தில் போடப்படுகிறது.

ஷா சாஹிப் ஒரு முறை இவ்வாறு கனவு கண்டுள்ளார்கள். ஒருமுறை இவர்களது மனைவில் அமத்துல் ஹகீல் பேகம் சாஹிபா ஒரு உயர்ந்த இடத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். நீங்களும்

வாருங்கள் என்று இவரை அழைக்கிறார்கள். அப்போது ஒரு வானவர் அல்லது இறைவனின் குரல் கேட்கிறது. இவர் இப்போது வரமாட்டார். ஏனென்றால் இவர் இன்னும் துஆ செய்ய வேண்டியது உள்ளது என்ற குரல் ஒலிக்கிறது.

இவர்களுக்கு துஆ மற்றும் இறைவணக்கத்திலிருந்த ஆர்வம் இவரது பாட்டனாரின் தர்பிய்யத்தால் ஏற்பட்டதாகும். அதேபோன்று தாய்வழிப் பாட்டனாருடன் இருந்ததாலும் ஏற்பட்டது. இவர் தந்தைவழிப் பாட்டனாரிடம் தான் வாழ்ந்து வந்தார்கள். ஸெய்யத் டாக்டர் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிப் கடைசிக் காலத்தில் மிகவும் பலவீனமாகி விட்டார்கள். அப்போது தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு செல்லமாட்டார்கள். ஆனால் வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் ஷா சாஹிபை இமாமத் செய்யச் சொல்வார்கள். அப்போது அவருடைய வயது 17 ஆகும்.

இதைப் பற்றி ஸெய்யத் தாவூத் ஷா சாஹிப் தாமே இவ்வாறு எழுதியுள்ளர். ஹஸ்ரத் டாக்டர் ஸெய்யத் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிபின் கடைசி காலத்தில் நான் இவர்களுக்கு பெரும்பாலும் ஜமாஅத்தாக தொழ வைத்துள்ளேன். குறிப்பாக ஜுமுஆ தொழுகையை தொழ வைப்பேன். அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதில் மிகவும் உறுதியானவர் ஆவார். ஆரோக்கியமாக இருந்த வரை பள்ளிவாசலுக்கு சென்று ஜமாஅத்தாக ஐவேளை தொழுகைகளையும் தொழுவார்கள். எழுந்து நடமாட முடியாமல் போன பின்பு அவர்கள் வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழ ஆரம்பித்தார்கள். இதற்காக பள்ளிவாசல் வடிவத்தில் வீட்டிற்கு உள்ளேயே ஒரு அறையும், இன்றொன்று வீட்டின் வெளியே தோட்டத்திலும் அமைத்தார்கள். அங்கு மக்ரிப் தொழுகையை ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள். இந்தத் தொழுகைக்காக வெளியிலிருந்தும் சில நண்பர்கள் வந்து கலந்து கொள்வார்கள். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு தினமும் ஹஸ்ரத் ஷாஜி (அதாவது ஷா சாஹிப்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் கவிதைகளை வாசிப்பார்கள்.

ஒருமுறை நான் ஜுமுஆ தொழுகையை தொழவைக்காமல் அக்ஸா பள்ளிவாசலுக்கு ஜுமுஆ தொழுகைக்காக சென்று விட்டேன். திரும்பி வந்ததும் ஹஸ்ரத் ஷாஜி மிகவும் கோபம் கொண்டார்கள். இன்று நீ எனக்கு தொழ வைக்கவில்லை. உனது தகப்பனார் வந்ததும் நான் உன்னைப் பற்றி புகார் செய்வேன் என்று கூறினார்கள். அந்நாட்களில் முஸஃப்பர் ஷா சாஹிபின் தந்தை ஆப்பிரிக்காவில் இருந்தார். அதன் பிறகு ஷா சாஹிப் கொஞ்ச காலம் வரை உடல்நலமின்றி இருந்தார்கள். பின்பு காலமானார்கள்.

ஹஸ்ரத் ஸெய்யத் முஸஃப்பர் ஷா சாஹிபுடன் இறைவன் சிறப்பான முறையில் நடந்து கொண்டான். உலக ஆதாயம் அவர்களது குறிக்கோளாக இருந்ததில்லை. எனவே அவர் மிகப்பெரிய செல்வந்தராக இல்லா விட்டாலும் அவரிடம் இருந்ததற்கு இறைவனுக்கு நன்றி கூறி வாழ்ந்தார்கள். அதிலிருந்தும் பல ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார்கள். செல்வம் படைத்த பணக்காரர்கள் கூட செய்ய முடியாத அளவுக்கு இவர் சில நேரம் உதவி செய்து வந்தார். இவரது மருமகள் இவருடன் இருந்து வந்தார்கள். இவர்களது மகன் ஷுஜய்பின் மனைவி கூறுகிறார். ஏதாவது பணம் வந்தால் கடைசி காலத்தில் கண்பார்வை குறைவின் காரணமாக கணக்கு எழுத முடியாமல் தமது மருமகளை கணக்கு எழுதச் சொல்வார்கள். அப்போது வஸிய்யத்திற்கான பங்கை முதலில் ஒதுக்குவார்கள். பிறகு அனாதைகளுக்கான பங்கை ஒதுக்குவார்கள். பின்பு ஏழை மாணவர்களுக்கான பங்கை ஒதுக்குவார்கள். பிறகு ஏழை நோயாளிகளுக்கான பங்கை ஒதுக்குவார்கள். அதன் பிறகு பணம் மிச்சம் இருந்தால் அதை தம்முடைய தேவைக்காக வைத்துக் கொள்வார்கள்.

பிறகு ஜமாஅத்தின் சந்தாக்களில், வக்ஃபே ஜதீத், தஹ்ரீகே ஜதீத் போன்ற சந்தாக்களில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்பார்கள். இவர்களது பிள்ளைகள் கூறுகிறார்கள். பலமுறை இவர் பிள்ளைகளிடம் உங்களுக்கு ஏதாவது சிக்கல் இருக்கிறதா? என்று கேட்பார்கள். ஆனால் அவர்களின் முன்பாக ஒருபோதும் நாங்கள் எங்கள் பிரச்சனைகளை பேசியிருக்கமாட்டோம். அவர்களது பார்வையும் மிகவும் பலவீனமாக இருந்தது. முகத்தைப் பார்த்து கவலையை அறிந்து கொள்ளும் அளவிற்கு அவருக்கு பார்வை கிடையாது. இவரது மகன் மஹ்மூத் அஹ்மத் கூறுகிறார். சில சமயம் எங்களுக்கு பிரச்சனைகள் இருக்கும். அப்போது ஓரிரு நாட்களுக்குப் பிறகு எங்கள் தந்தையார் எங்களிடம் ஒரு நபரின் பெயரைக் குறிப்பிட்டு இந்த நபரால்

உங்களுக்கு ஏதும் பிரச்சனை உள்ளதா? என்று கேட்பார்கள். இது உண்மையாகவே இருக்கும். ஆனால் இறைவனைத் தவிர வேறு யாராலும் இதை தெரிந்திருக்க முடியாது. இதனால் துஆ செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு எழும். அதன் விளைவாக பிரச்சனைகள் நீங்கி எங்களுக்கு எளிமை பிறக்கும்.

பிறகு இவர்களது மருமகளும் இதைக் கூறுகிறார்கள். இவர்களிடம் ஒருபோதும் நாங்கள் பிரச்சனைகளைப் பேசியே இருக்கமாட்டோம். அந்தப் பிரச்சனைகளைப் பற்றி எங்களிடம் விசாரிப்பார்கள். நபர்களின் பெயரைக் குறிப்பிட்டு இன்னின்ன நபர்களால் பிரச்சனையா? என்று கேட்பார்கள். பின்பு அவர்கள் செய்யும் துஆவின் விளைவாக அந்த பிரச்சனைகள் நீங்கி விடும்.

திருக்குர்ஆனோடு அவர்களுக்கு அதிக நேசம் இருந்தது. தினமும் பல ஜுஸ்வுகள் ஓதி வருவார்கள். குறைந்தது 5-6 ஜுஸ்வுகள் ஓதுவார்கள். சில நேரம் 7-8 ஜுஸ்வுகள் கூட ஓதுவார்கள். இதன் காரணமாக திருக்குர்ஆனில் பெரும் பகுதி அவர்களுக்கு மனனமாகி இருந்தது. ஒருமுறை ரமலான் மாதத்தின் போது என்னிடம் கூறினார்கள். எனக்கு கண் பார்வை குறைந்து கொண்டே இருக்கிறது. இனி என்னால் திருக்குர்ஆனை அதிகமாக ஓத முடியாது. இது என்னை மிகவும் வருத்துகிறது. உடனே நான் மிகவும் முற்போக்குடன் பேசுவதாக நினைத்துக் கொண்டு, அதனால் என்ன? ஓரிரு பாகங்கள் இப்போதும் நீங்கள் ஓதத்தான் செய்கிறீர்களே? என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை இல்லை. இந்த நிலையிலும் நான் 3 அல்லது 4 பாகங்கள் ஓதி வருகிறேன் என்று கூறினார். இதுவே திருக்குர்ஆனின் மீது அவர்கள் கொண்டிருந்த நேசமாகும். ஆனால் அவர்களுக்கிருந்த கவலை என்னவென்றால் ரமலான் மாதத்தில் எப்போதும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். அது முடியாமல் போனது தான் கவலை என்று கூறுகிறார்கள்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாக அவர்களது கண் பார்வை மிகவும் குன்றி விட்டது. இதனால் அவர்களால் முற்றிலும் ஓத முடியாமல் போய் விட்டது. பெரும்பாலான பகுதிகள் அவருக்கு மனனமாக தெரிந்திருந்தது. அதையே ஓதிக் கொண்டிருந்தார்கள். இதிலும் இறைவன் அவர்களோடு மிகவும் வியக்கத்தக்க வகையில் நடந்து கொண்டான். அவர்கள் ஒருமுறை தமது பேரனிடம், என்னால் திருக்குர்ஆனை பார்த்து ஓத முடியாது. ஆனால் நான் எனக்கு மனனமாக உள்ள பகுதிகளை ஓதுகிறேன். அப்போது நான் மறந்து விட்டால் ஒரு வானவர் வந்து அதை எனக்கு ஞாபகமூட்டி விட்டு செல்கிறார். அவர் ஓதும் போது நானும் அவருடன் சேர்ந்து ஓதுகிறேன் என்று கூறினார்கள்.

இவரது மூத்த மகன் ரப்வாவில் வீடு கட்டிக் கொண்டிருந்தார். அப்போது அடிக்கடி வேலை எவ்வளவு நடந்துள்ளது என்று பிள்ளைகளிடம் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருமுறை தமது சிறிய மருமகளிடம் இறைவன் அந்த வீட்டை எனக்கு காட்டி விட்டான் என்று கூறி அந்த வீட்டின் வரைபடத்தை விவரித்துக் கூறினார்கள். அந்த வீட்டின் அறைகள் இப்படி இப்படி அமைந்திருக்கிறது என்று அதை அப்படியே உள்ளபடியே விவரித்தார்கள். எங்களில் யாரும் அவர்களுக்கு அதை புரிய வைக்க முடியாது. ஏனெனில் வரைபடத்தைக் காட்டி வீட்டின் வடிவமைப்பை விவரித்தாலும் அதை அவர்களால் பார்த்து புரிந்து கொள்ளும் அளவிற்கு பார்வை இல்லை. ஆனால் யாருமே புரிய வைக்க முடியாத ஒன்றை அவர்களே தெரிந்து கொண்டார்கள்.

இவர்களது பிள்ளைகளிடம் ஜமாஅத்தின் பணிகள் ஏதாவது ஒப்படைக்கப்பட்டால் அதற்காக அதிகம் துஆ செய்வார்கள். நான் இவர்களுடைய மகளை மணந்ததால் என்னுடன் உறவு அடிப்படையிலும் தொடர்பு ஏற்பட்டது. என்னுடைய தனிப்பட்ட பணிகள் மற்றும் ஜமாஅத்தின் பணிகளுக்காக மிக அதிகமாக துஆ செய்தார்கள். கிலாஃபத்திற்குப் பிறகு கண்ணியம் மற்றும் மரியாதை வழங்கினார்கள். இதனால் துஆ செய்வதில் இவர்களுக்கு இன்னும் அதிக உருக்கம் ஏற்பட்டது. மாநாடுகள் மற்றும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் வெற்றிக்காக அதிகமாக துஆ செய்தார்கள். இவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான உணர்வு நமக்கு ஏற்படும். ஒவ்வொரு சுற்றுப் பயணத்தின் போதும் குறிப்பான கவனத்துடன் எனக்காக துஆ செய்து வந்தார்கள்.

நமது வட்டாரத்தைச் சேர்ந்த சில குத்தாம்கள் இரவின் போது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். 1974 லும் 1984 லும் நிலைமை மோசமான போது இரவு நேரத்தில் டியூட்டி கொடுப்பதற்காக குத்தாம்கள் விழித்திருப்பார்கள். அப்போது குத்தாம்கள் இரவு கண் விழிப்பதற்காக தேனீர் குடிக்கும் பழக்கம் இருந்தது. எப்போதும் இவர்களது வீடு திறந்தே இருக்கும். அப்போது சில இளைஞர்கள் இவர்கள் வீட்டிற்குச் சென்று தேனீர் தயார் செய்து எடுத்து வருவார்கள். இளைஞர்கள் இரவு முழுவதும் டியூட்டி கொடுப்பதற்காக தேனீர் தயார் செய்து கொண்டு செல்வதைப் பார்த்தவுடன் இரவு 2.30 மணிக்கு இவர்களே தேனீர் தயார் செய்து சாப்பிடுவதற்கும் ஏதாவது இருந்தால் அதையும் எடுத்து மேஜையின் மீது வைத்து விடுவார்கள். பணியில் இருக்கும் இளைஞர்களுக்கு இவ்வாறு உதவி செய்வார்கள்.

இவர்கள் இரவில் விரைவாக படுக்கைக்கு சென்று விடுவார்கள். நள்ளிரவு 1.30 மணிக்கு கண்விழிப்பார்கள். மிகக் குறைவாகவே தூங்குவார்கள். இரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக விரைவில் எழுந்து விடுவார்கள். பிறகு தமக்காக தேனீர் தயார் செய்வார்கள். சில நேரங்கள் எங்கள் சிற்றன்னை தேனீர் தயார் செய்து கொண்டு வந்து இவர்களை தஹஜ்ஜுத்திற்காக எழுப்புவார்கள். பிறகு இவர்களின் இளைய மகன் ஜாமியாவில் சேர்க்கப்பட்ட பின்பு அவனை தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுப்புவார்கள். உனக்கு தேனீர் தயாராக உள்ளது. குடித்து விட்டு தஹஜ்ஜுத் தொழு என்று கூறுவார்கள்.

இவர்களின் இளைய பருவத்திலிருந்து இறைவன் இவர்களுடன் வியப்பூட்டும் விதத்தில் நடந்துள்ளான். உதாரணமாக இவரது மகன் எழுதுகிறார். எங்கள் பகுதியில் பாம்புகள் அதிகமாக உண்டு. இவர்கள் குடியேறிய அந்த காலகட்டத்தில் புதிய குடியிருப்புகள் உருவாகிய காலமாகும் அது. எனவே அதிகமாக பாம்புகளின் நடமாட்டம் இருந்து வந்தது. பெரிய பெரிய விஷப்பாம்புகள் இருந்தன. ஒருமுறை அவர்கள் கூறுகிறார்கள். எனது உடல்நலம் சற்று சரியில்லை. எனவே ஃபஜ்ர் தொழுகையை வீட்டிலேயே தொழுது கொள்ளலாம் என்று எண்ணினேன். ஆனால் ஏதோ மறைவான சக்தி என்னை இல்லை; பள்ளிக்கு சென்று தொழ வேண்டும் என்று கூறியது. பள்ளிவாசல் பக்கத்தில் தான் இருந்தது. தொழுது விட்டு வீடு திரும்பிய போது இவர்களின் இரண்டு பிள்ளைகளும் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெரிய கருநாகம் கட்டிலில் ஏற முயற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். பிறகு அதை அவர்கள் அடித்துக் கொன்று விட்டார்கள். இவர் தூங்கியிருந்தால் அந்தப் பாம்பு அவரது குழந்தைகளுக்கு ஏதாவது இழப்பை ஏற்படுத்தி இருக்கும். இறைவன் இவ்வாறு இவர்களுக்கு உதவி செய்தான். இவ்வாறு இன்னும் எண்ணற்ற சம்பவங்கள் இவரது வாழ்வில் நிகழ்ந்துள்ளன.

ஸெய்யத் தாவூத் முஸஃப்பர் சாஹிப் மற்றும் இவரது சகோதரர் ஸெய்யத் மஸ்வூத் முபாரக் ஷா சாஹிப் ஆகிய இருவரும் லாஹூரின் அரசுக் கல்லூரியில் பி.ஏ. படித்து தேர்ச்சி பெற்றார்கள். இவர்கள் நேர்மை மற்றும் நல்லொழுக்கத்தின் காரணமாக கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். முழு கல்லூரியிலும் இவர்களைப் போன்று நேர்மையானர்கள் யாரும் இல்லை என்ற புகழினைப் பெற்றார்கள். ஒருமுறை இவர்களது நண்பனுக்கு குறும்பு செய்யும் எண்ணம் ஏற்பட்டது. அவர் விடுதியின் கண்காணிப்பாளருடைய சில பொருட்களைக் கொண்டு வந்து இவர்களது அறையில் மறைத்து வைத்து விட்டனர். கல்லூரி நிர்வாகம் அந்தப் பொருட்களை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க தொடங்கியது. விடுதியின் எல்லா அறைகளையும் பரிசோதித்தனர். இவர்களின் அறையை அடைந்தவுடன் இவர்கள் இருவரும் மிகவும் நேர்மையானவர்கள். எனவே இவர்களது அறையில் அந்தப் பொருட்கள் இருக்காது என்று கூறிவிட்டனர். ஆனால் உண்மை என்னவென்றால் அந்த பையன்கள் இவர்களது அறையில்தான் அதை கொண்டு வந்து மறைத்து வைத்திருந்தனர். ஆனால் இது இவர்களுக்கு தெரியாது. இவர்கள் அறைக்கு சென்றதும், அவர்கள் தேடி வந்த பொருள்கள் அங்கு கிடப்பதைப் பார்த்தார்கள். இதனால் மிகவும் விநோதமாக உணர்ந்தார்கள். உண்மையைக் கூற வேண்டியது வரும். அவ்வாறு கூறினால் நண்பர்களுக்கு தண்டனை கிடைக்கும். அவரை தண்டனையிலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது என்று யோசித்தார்கள். பரிசோதனைகள் எல்லாம் முடிந்த பின்னர் அவர்கள் விரைவாக அந்தப் பொருள்களை எடுத்து கண்காணிப்பாளரின் அறைக்கு முன்னால் வைத்து விட்டார்கள். இதனால் நிர்வாகம் மேற்கொண்டு

எதையும் விசாரிக்கவில்லை. விசாரணை நடந்திருந்தால் இவர்கள் உண்மையைக் கூற வேண்டியது ஏற்பட்டிருக்கும். இவர்கள் உண்மையை கூறினால் இவர்களுக்கு யார் மீது சந்தேகம் இருக்கிறதோ அவருடைய பெயர் வந்திருக்கும். இதனால் அவருக்கு தண்டனை கிடைத்திருக்கும். நிர்வாகத்திற்கு இவ்விரண்டு சகோதரர்களின் நேர்மையைப் பற்றி நன்றாக தெரியும்.

நான் கூறியது போன்று, இவர் அரசுக் கல்லூரியின் மூலம் பி.ஏ பட்டப்படிப்பை முடித்து விட்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தூண்டுதலின் பேரில் 1944 ல் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் எழுதினார்கள். நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை அடிக்கடி கனவில் காண்பதால் எனது வாழ்க்கையை அர்ப்பணிக்கிறேன் என்றார்கள். பின்பு அவர்கள் தமது சகோதரரையும் வாழ்க்கையை அர்ப்பணிக்குமாறு ஊக்கப்படுத்தினார்கள். இவ்வாறு இருவரும் வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள அமன் சின்டிகேட் என்ற திட்டத்தின்படி சிந்து மாகாணத்திற்கு அனுப்பினார்கள். அங்கு கொஞ்ச காலம் இருந்தார்கள். பிறகு ஏறக்குறைய பதினோரு வருடமாக 1982 முதல் 1993 வரை வகாலத்தே தப்ஸீரில் தொண்டாற்றி வந்தார்கள். சரியான நேரத்திற்கு அலுவலகம் செல்வார்கள். இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றுவார்கள். மேற்கொண்டு வீண் பேச்சுகளில் ஈடுபடமாட்டார்கள். இவர்களது மேலதிகாரிகள் இவரை விட வயதில் குறைந்தவர்களாகவும் இருந்தனர். சிலர் அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர்களாகவும் இருந்தனர். ஆனால் முழுக் கட்டுப்பாட்டுடன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை பொறுப்புணர்ச்சியுடன் செய்து வந்தார்கள். அதிகமாக பணிகள் கொடுக்கப்பட்டாலும் அவை எல்லாவற்றையும் சரியாக நிறைவேற்றி வந்தார்கள். இவ்வளவு பணிகளைத் தந்து விட்டீர்களே என்று புகார் கூறியதும் இல்லை.

நமது ஒரு முபல்லிக் லயீக் தாஹிர் சாஹிப் அவர்கள் எனக்கு எழுதியதில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். நான் நாயிப் வகீலுத் தப்ஷீராக இருந்த போது இவர் மிகவும் பணிவுடன் நடந்து கொள்வார். மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார். மரியாதையுடன் இவர் நடப்பதைப் பார்த்தால் சில நேரம் வெட்கம் ஏற்பட்டு விடும். தாம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மருமகன் என்பதை ஒருபோதும் வெளிப்படுத்தமாட்டார். அல்லது கலீஃபாக்களின் சகோதரியை மணந்தவர் என்பதை வெளிப்படுத்தமாட்டார். மிகவும் அமைதியான குணமும் துஆ செய்பவராகவும் இருந்தார். துஆ செய்தவாறு அலுவலகத்திற்கு வருவார்கள். மிகவும் பொறுப்புடன் பணிகளை செய்து விட்டு சென்று விடுவார்கள். இவர் வானவரின் குணமுடைய மனிதராக விளங்கினார். யார் அவர்களுடன் பழகினாலும் இவரைப் புகழ ஆரம்பித்து விடுவார்கள்.

ஏழைகளுக்கு பணக்காரர்களைப் போன்று மதிப்பும் கண்ணியமும் வழங்குவார்கள். சத்தியத்தைக் கூறும்போது ஏழைப் பணக்காரர் பேதம் ஏதும் பார்க்க மாட்டார். சிலர், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் காரணத்தால் இவருக்கு இழப்பு ஏற்படுத்த முயற்சி செய்தனர்; இழப்பை ஏற்படுத்தவும் செய்தனர். இழப்பை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மனித உரிமை அடிப்படையில் சட்டத்தில் அனுமதி இருந்த போதிலும் அவர்கள் தமது பிரச்சனையை இறைவனிடத்தில் ஒப்படைத்து வந்தார்கள். நானும் அவர்களை நன்கு அறிவேன். இவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தியவர்கள் எல்லாரும் பின்பு ஏதாவது ஒரு வழியில் பிடிபட்டனர். அதன் பிறகு அவர்கள் ஷா சாஹிபிடம் வந்து மன்னிப்பு வேண்டினர். எப்போதும் அவர்கள் எல்லாரையும் மன்னித்தே வந்தார்கள். நீங்கள் எனக்கு ஏற்படுத்திய இழப்பு எவ்வாறு சரி செய்யப்படும் என்று ஒருபோதும் அவர்கள் யாரையும் குறை கூறியதில்லை.

இவர்களைப் பற்றித்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் யார் மீதும் வஞ்சகம் கொள்வதில்லை. மாறாக, இழப்பு ஏற்படுத்தியவர்கள் கூட, அவர்கள் மன்னிப்பு வேண்டியவுடன் அவர்களை மன்னித்தார்கள். இவர்களைப் பற்றியே இவர்கள் உண்மையான முறையில் தம் உள்ளத்தை தூய்மைப்படுத்தியவர்கள் என்று கூற முடியும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவரது நிகாஹ்வின் போது வழங்கிய உரையிலிருந்து சில பகுதிகளை வாசிக்க விரும்புகிறேன். இது வருங்காலத்

தலைமுறையினர் பேணி நடப்பதற்கு உதவியாக இருக்கும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது நான்கு பிள்ளைகளுக்கு நிகாஹ் நடத்தியுள்ளார்கள். அதில் ஒன்று, ஸெய்யது தாவூது ஷா சாஹிபின் மனைவியாவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குத்பாவை இவ்வாறு கூறித் தொடங்கினார்கள்:

உலகத்தில் விலை மதிப்பற்ற பொக்கிஷமாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருந்தார்கள். காலம் கடந்தவுடன் மாறியதாலும் பொருட்களுக்கு அதன் தக்க காலத்தில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பிற்காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றிய போது அப்போதைய காலகட்டமும் சூழ்நிலையும் எவ்வாறு இருந்தது என்பதை மக்கள் இப்போது அனுமானிக்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இறைவன் அனுப்பவில்லை என்றால் இன்று மார்க்கம் என்பது மனிதர்களையும், கல்லறைகளையும், சிலைகளையும் வணங்கினால் போதும்; இதுவே மார்க்கம் என்று கருதப்பட்டிருக்கும். சட்டங்கள், நல்லொழுக்கங்கள் ஆகியவற்றிற்கு உலகில் எந்த மதிப்பும் இருந்திருக்காது. மார்க்கம் என்பது கூட்டு முயற்சியாக இருந்திருக்காது. இறைவனோடு மனிதன் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வது முற்றிலும் முடியாத காரியமாகி இருக்கும். அவ்வாறு தொடர்பு ஏற்படுத்தினாலும் அதை மார்க்கமற்றது என்றும் வழிகேடு என்றும் பெயரிடப்பட்டிருக்கும். மனித உரிமைகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இருந்திருக்காது. பெண்கள் வழக்கம் போல் அடிமைத்தன வாழ்க்கையையே வாழ்ந்து வந்திருப்பார்கள். சிலைகள் வழக்கம் போல் வணங்கப்பட்டுக் கொண்டிருக்கும். இறைவன் வழக்கம் போல் கைவிடப்பட்டிருப்பான். அடிமைத்தனம் வழக்கம்போல் உலகில் நிலைபெற்றிருக்கும். கொடுக்கல் வாங்கலில் வழக்கம் போல் அநியாயம் மற்றும் அக்கிரமம் ஆகியவை ஆட்சி புரிந்திருக்கும். உலகம் இன்று இருப்பது போல் இருந்திருக்காது என்று கூறினார்கள். பிற்பகுதிகளை நான் விட்டு விட்டு அடுத்ததை வாசிக்கிறேன்.

உலகத்தில் காணப்படும் கூற்றுக்களிலேயே மக்கள் இதுவரைக்கும் கூறி வைத்துள்ள கூற்றுக்கள் அனைத்திலும் மிகச் சிறந்த நேர்மையான கூற்று ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி கூறியதாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீர் எனது கண்ணின் கருவிழியாக இருந்தீர். உமது மரணத்தால் இன்று எனது கண்கள் குருடாகி விட்டன. எனவே உமது மரணத்திற்குப் பிறகு இனி யார் மரணித்தாலும் எனக்கு கவலையில்லை. நானே உமது மரணத்திற்கு அஞ்சினேன். இனி யார் மரணித்தாலும் அது என்னை பாதிக்காது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த கவிதை வரியின் பொருள் மற்றும் அதன் மகத்துவத்தை மக்கள் அலட்சியப்படுத்தி விடுகின்றனர். அதாவது இந்த கவிதை வரிகளைப் பாடியவர் ஒரு பார்வையற்ற மனிதர் ஆவார். இதே கவிதையை ஒரு பார்வையுடைய மனிதர் கூறியிருந்தால் இது வெறும் இலக்கிய நயம் வாய்ந்த வரிகள் என்ற அளவில் மட்டுமே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். ஆனால் இந்த கவிதை பார்வையற்ற ஒருவரின் வாயிலிருந்து வந்ததால் இதன் மகத்துவம் முற்றிலும் மாறி விட்டது. அதாவது ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையின் மூலம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் எனது வெளிப்படையான கண்கள் எனக்கு கிடையாது என்ற போதிலும் நான் பார்வையுடையவனாகவே இருந்தேன். எனது உடலில் கண் இல்லாத காரணத்தால் மக்கள் என்னை குருடர் என்று நினைத்தனர். ஆனால் நான் என்னை குருடன் என்று கருதவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூலமாக எனக்கு உலகம் தென்பட்டது. இப்போதும் நான் முந்தைய நிலையைப் போன்று தான் இருக்கிறேன் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் நான் அப்படியில்லை. முதலில் நான் பார்வையுடையவனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் பார்வையற்றவனாக ஆகி விட்டேன் என்று இக்கவிதையின் மூலம் வாதம் புரிகிறார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைவரை விடவும் அதிக மதிப்புள்ளவர்களாவர். ஆனால் இறைவனின் சட்டதிட்டங்களுக்கேற்ப இறுதியில் ஒருநாள் அவர்களும் உலகை விட்டு சென்று விட்டார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக ஹஸ்ஸான் கூறினார்.

இதிலிருந்து இவ்வுலகில் யாரும் நிரந்தரமாக வாழ்வதில்லை என்பது தெளிவாக புரிகிறது. பிறகு கூறுகிறார்கள்:

உலகில் நிரந்தரமாக உயிர் வாழ்ந்த எந்த நபரும் இல்லை. இந்நிலையில் இறப்பவர்களுக்கு பிரதிநிதிகள் உருவாக்குவது மட்டும் இதற்குரிய வழியாகும். இறந்தவர்களுக்கு பிரதிநிதிகள் வாழ்ந்து வந்தால் இறந்த நபருக்கான இழப்பு தானாகவ மறைந்து விடுகிறது. நம்மை படைத்தவனின் விருப்பம் இது என்பதால் நாம் வீணாக அழுவதாலும் புலம்புவதாலும் எந்த பயனும் இல்லை என்பதை மனிதன் புரிந்து கொள்கிறான். அழுவதும் புலம்புவதும் அறிவுக்கு மாற்றமானதும் பைத்தியத்தின் அடையாளமும் ஆகும்.

பிறகு ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறி இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஒரு அப்பாஸி மன்னன் ஒரு பெரிய அறிவாளியை சந்திக்கச் சென்றான். அப்போது அவர் தமது சீடர்களுக்கு பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார். மன்னன் அந்த ஆலிமிடம் உம்முடைய மாணவர்களில் ஒரு சிலரை என்னிடம் அனுப்புங்கள். நான் அவர்களை பரிசோதிக்க விரும்புகிறேன் என்றான். அந்த மாணவர்கள் மிகச் சிறந்த முறையில் மன்னனின் கேள்விகள் அனைத்திற்கும் பதிலளித்தனர். அதைக் கேட்டு மன்னன், உம்மைப் போன்ற பிரதிநிதிகளை பின்னால் விட்டுச் செல்பவர் ஒருபோதும் மரணிப்பதில்லை என்று கூறினான். ஏனென்றால் அவரது போதனையை நிலைநாட்டுபவர் உலகில் எப்போதும் இருந்து வருவர். மனிதனின் உடலுக்கு எந்த மதிப்பும் இல்லை. தசையும் எலும்பும் ஒரு திருடனுக்க உள்ளதைப் போல் நல்லவருக்கும் இருக்கிறது. ஒரு திருடனுக்கு இருக்கும் இரத்தத்தைப் போன்றுதான் நல்லவருக்கும் இரத்தம் இருக்கிறது. அதில் வித்தியாசம் என்னவென்றால், அவனது நல்லொழுக்கம் தீயதாகவும், இவரது ஒழுக்கம் நல்லதாகவும் இருக்கிறது. அதாவது திருடனுடைய ஒழுக்கங்கள் தீயதாகவும், நல்லவருடைய ஒழுக்கம் உயர்ந்ததாகவும் இருக்கிறது. திருடனிடத்தில் ஆன்மீக சிந்தனை இருப்பதில்லை. ஆனால் இவரிடத்தில் உயர் தரமான ஆன்மீக ஒழுக்கங்கள் காணப்படும். எனவே ஒருவரது ஆன்மீகமும் உயர்தரமான ஒழுக்கங்களும் பிறரிடம் பாதுகாக்கப்படும் என்றால் அவர் எவ்வாறு மரணித்தவராக முடியும்? அதாவது உயர் தரமான நல்லொழுக்கங்கள் வருங்கால சந்ததிகளிடத்தில் தொடர்ந்து நிலைபெற்றுக் கொண்டிருக்கும் என்றால் அவர் மரணித்தவர் ஆக மாட்டார்.

மேலும் கூறுகின்றார்கள்:

மனிதனுக்குப் பின்னால் சிறந்த பிரதிநிதிகள் இருந்து வருவதில்தான் எல்லா வெற்றியும் அடங்கியுள்ளது. இதற்காகத்தான் சமுதாயங்கள் முயற்சி செய்யும். இது ஒரு சமுதாயத்திற்கு கிடைத்து விட்டால் அது மிகப்பெரிய அருட்கொடையாகும். இன்று வரை இதை உலகம் உணர்ந்து கொள்ளவில்லை. வெற்றி என்பது சந்ததிகளில்தான் உள்ளது. வருங்கால சந்ததிகள் ஒருபோதும் மரணிப்பதில்லை. மாறாக, அது உயிருடன் இருக்கிறது. ஆனால் வருங்கால சந்ததிகள் நல்லவர்களாக இல்லை என்றால் அந்த சமுதாயத்தின் எல்லா வெற்றிகளும் பயனற்றதும், வீணானதும் ஆகும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்:

சமுதாயங்களின் முன்னேற்றம் அதன் வருங்கால சந்ததிகளின் முன்னேற்றத்தைச் சார்ந்துள்ளது. எனவே வருங்காலத்தில் சந்ததிகளில் நாம் நமது சிறந்த பிரதிநிதிகளை ஏற்படுத்த வேண்டும். இதில் தான் நமது எல்லா முயற்சிகளும் இருக்க வேண்டும். அவை இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் இஸ்லாத்தின் நல்ல எதிர்காலத்திற்கு உத்திரவாதமாக அமைய வேண்டும். எல்லாவற்றிற்கும் அதிகமாக இது நிகாஹ்வின் மூலமாகத்தான் கிடைக்கிறது. நிகாஹ்களின் மூலம் தான் புதிய தலைமுறைகள் உருவாகின்றன. எனவே

திருமணம் மனித வாழ்வின் மிகவும் முக்கிய பணியாகும். இதற்காகத்தான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திருமணத்திற்கு முன்பாக இஸ்திகாரா தொழுவதற்கும் மிகவும் சிந்தித்து செயல்படவும் மன உணர்ச்சிகளை பின்பற்றி நடப்பதில் இருந்து தவிர்ந்திருக்கவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இதை இளைஞர்கள் குடும்ப உறுப்பினர்கள் ஆகியவர்கள் கவனிப்பது அவசியமாகும்.

அவர்கள் கூறினார்கள். திருமணம் செய்வதால் நேர்மையான தியாகங்கள் செய்யக் கூடிய சந்ததிகள் பிறக்க வேண்டும். சந்ததிகளுக்கு முன்னுரிமை வழங்குவதால் தான் எல்லா தீமைகளும் பிறக்கின்றன. அவர்களுக்கு பகட்டு கற்பிக்கப்படுகிறது. இதனால் மார்க்க உணர்வு அவர்களிடமிருந்து அழிந்து விடுகிறது. திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான். சந்ததிகளை அளவுக்கு அதிகமாக நேசிப்பவர் ஈமான் கொண்டவர் இல்லை. சந்ததிகளை மார்க்க கட்டுப்பாட்டிற்குள் வைக்காதவர் ஈமான் கொண்டவர் இல்லை. ஈமான் கொண்டவர் தமது சந்ததிகளை மார்க்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார். சந்ததிகளை மார்க்கக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர் தனது சந்ததிகளை ஒருபோதும் வீணாக்கமாட்டார். ஏனென்றால் அளவுக்கு அதிகமாக நேசிப்பதால் தான் சந்ததிகள் வீணாகின்றனர்.

இஸ்லாமிய வாழ்க்கை முறையில் திருமணம் மிகவும் முக்கியவத்துவம் வாய்ந்ததாகும். ஒரு கட்டடத்திற்காக பூமி தோண்டப்படுகிறது. அது வெட்டப்படுகிறது. பின்பு கட்டடம் கட்டப்படும். ஆனால் அதன் அஸ்திவாரம் உறுதியாக இல்லா விட்டால் கட்டடம் விழுந்து விடும். அதேப் போன்று தான் திருமணத்திலும் சிந்தித்து செயல்படாவிட்டால் பிறகு திருமணம் கூட அழிவிற்கு காரணமாக அமைந்து விடும். ஒரு விதத்தில் மகிழ்ச்சியை தரக்கூடிய அதே நிகழ்ச்சி உண்மையில் அபாயத்தை விளைவிக்கக் கூடியதாக ஆகி விடுகிறது.

பிறகு கூறுகின்றார்கள்: நான் எனது பிள்ளைகளின் திருமணத்தில் அவர்கள் வசதிவாய்ப்புள்ள செல்வந்தவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று ஒருபோதும் எண்ணியதில்லை. நான் எப்போதும் ஜமாஅத்தின் மக்களுக்கும் இந்த அறிவுரையைத்தான் கூறி வந்துள்ளேன். ஜமாஅத்தின் மக்கள் வசதி நிறைந்த செல்வந்தவர்களின் வீட்டில் சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். நமக்கும் அவ்வாறான வரன் கிடைத்தது. ஆனால் நாம் நமது தகுதி நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக அதை மறுத்து விட்டோம்.

ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கேற்ப திருமணம் செய்து கொள்ள வேண்டும். எனவே இந்த கோட்பாட்டை எப்போதும் நாம் மனதில் வைத்து பின்பற்றி நடக்க வேண்டும். நமது இன்றைய சூழ்நிலையிலும் சில பிரச்சனைகள் எழுகின்றன. எனவே இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தினரும் ஜமாஅத்தின் உறுப்பினர்களும் தமது திருமணங்களில் இதை கவனத்தில் கொள்ள இறைவன் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. இறைவனிடம் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வது தான் ஓர் அஹ்மதியின் குறிக்கோளாகும். மார்க்கத்திற்கு தொண்டு செய்வது அஹ்மதியின் குறிக்கோளாகும். மார்க்கத்திற்கு தொண்டு செய்வது அஹ்மதியின் குறிக்கோளாகும். மார்க்கத்திற்கு தொண்டு செய்வது அஹ்மதியின் குறிக்கோளாகும். உலகத்தை மார்க்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டுமே தவிர மார்க்கத்தை உலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரக் கூடாது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியது போன்று இதுவே சமுதாயங்கள் உயிருடன் இருப்பதற்கான வழியாகும்.

ஜமாஅத்தின் ஒரு நேர்மையான மனிதன் இவ்வுலகை விட்டுப் பிரிந்தால் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மற்றும் குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்திலிருந்து ஒருவர் இருந்தால் நன்மை மற்றும் இறைவனுடன் உள்ள தொடர்பு ஆகியவற்றை முன் வைத்து ஒரு புதிய சிந்தனையுடன் தமது பாதையை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். உலகம் கொஞ்ச நாளுக்குரியதுதான். இது அழிந்து விடும். நிரந்தரமாக நிலைத்திருப்பது இறைவனின் விருப்பத்தைப் பெறுவதாகும். இறைவன் நம் அனைவருக்கம் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹஸ்ரத் ஸெய்யத் தாவூது முஸஃப்பர் ஷா சாஹிபிற்கு நான்கு மகன்கள் உள்ளனர். இவர்கள் பல்வேறு முறையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்து வருகின்றனர். இவருக்கு மூன்று மகள்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் எனது மனைவியாவார். மற்றவர்கள் எனது மனைவியின் சகோதரிகள் ஆவர். இவர்கள் இருவரும் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளவர்களை திருமணம் செய்துள்ளார்கள். இவர்களின் சந்ததிகளும் இவர்களுக்கும் பின் வருங்கால சந்ததிகளும் மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முன்னுரிமை வழங்குபவர்களாக திகழ இறைவன் இவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! இவருடைய இரண்டு மகன்களும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் இல்லை என்றாலும் இவர்கள் தங்களது பெற்றோரின் குணநலன்களைப் பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் ஏதாவதொரு வகையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகிறார்கள். இன்னும் தொண்டாற்றிக் கொண்டே இருப்பார்கள் இன்ஷா அல்லாஹ். இவர்களும் இவர்களது எல்லா சந்ததிகளும் எப்போதும் இறைவனின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக இருப்பார்களாக. அவர்களது துஆக்கள் எப்போதும் இவர்களுக்கு கிடைத்துக் கொண்டே இருக்கட்டுமாக. அவ்வாறே நமது எல்லா சான்றோர்களின் சந்ததிகளும், சஹாபாக்களின் சந்ததிகளும் எப்போதும் தமது முன்னோர்களின் நல்ல முன்மாதிரியை நிலைநாட்டக் கூடியவர்களாக இருப்பார்களாக. நல்ல சந்ததிகளை உருவாக்க துஆ செய்பவர்களாகவும் தமது செயல்களால் நல்வழிபடுத்துபவர்களாகவும் விளங்குவார்களாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் ஸெய்யது முஸஃப்பர் ஷா சாஹிபின் ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 11.03.2011**

Translated by : **Maulvi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**